

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.12.2024) சென்னையில், உடல்நலக் குறைவால் காலமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் ஏ.எம். இராமன், இ.அ.ப., (ஓய்வு) அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் உள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் செயலாளராகப் பணிபுரிந்த

# ஏ.எம்.இராமன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.4-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் செயலாளராகப் பணிபுரிந்த ஏ.எம். இராமன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து விடுத்துள்ள செய்தி வருமாறு:-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளராகப் பணிபுரிந்த ஏ.எம். ராமன், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்த முற்றேன்.

ஆதிதிராவிடர்நலத்துறைஇயக்குநர், உயர்கல்வித்துறைச் செயலாளர், கோவை மாவட்ட ஆட்சியர் எனப் பல்வேறு பொறுப்புகளிலும் திறம்படப் பணியாற்றிய ராமன் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவரது செயலாளராக 1996- 1999 வரை பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், அவருடன் பணிபுரிந்த அலுவலர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் செயலாளராகப் பணிபுரிந்த

# ஏ.எம்.இராமன்ஐ.ஏ.எஸ்.(ஓய்வு)மறைவு!

## ஏராளமான ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். அதிகாரிகள் அஞ்சலி!

சென்னை, டிச. 4 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஏ.எம். இராமன் அவர்கள் மறைவெய்தினார். சென்னை, இந்திரா நகர் இல்லத்தில் செவ்வாய்க் கிழமை, அவர் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. புதுக்கோ ட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே அமரடக்கி கிராமத்தில் இன்று (புதன் ) நல்லடக்கம் நடைபெறுகிறது.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளராக, 1996 முதல் 1999 வரை பதவி வகித்தவர் ஏ.எம்.ராமன், ஐ.ஏ.எஸ்.; அதற்குமுன், 1983 முதல் 1986 வரை தமிழ்நாடு ஆளுநரின் செயலாளராகவும், தொழில்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, கல்வித்துறை முதலான பல்வேறு துறைகளிலும் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டப்பெற்றவர்.

1989 ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர்களில் ஒருவராகவும், பின் கோவை மாவட்ட ஆட்சியராகவும் நியமிக்க ப்பட்ட வர். கோவை மாவட்டத்தின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் பொதுமக்களின் வாழ்க்கை முன்னேற் றத்திற்கும் பாடுபட்டவர். அன்றைய தமிழ்நாடு அரசின் திட்ட ங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி முதலமைச்சர் கலைஞர் அவர்க ளின் பாராட்டுகளைப் பெற்றவர். இவருடைய முனைப்பான பல்வேறு பணிகளையும் சுட்டி க்காட்டி, "ராமன் எத்தனை ராமனடி என்று பாராட்டத் தோன்றுகிறது" என்றும், "ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ராமனாக கலெக்டர்கள் திகழ வேண்டும்" என்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பட்டவர்.

ஏ.எம்.இராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் கடந்த சில மாதங்களாக உடல் நலிவுற்று தனியார் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வந்தார். சிகிச்சை பலனின்றி 2.12.2024 அன்று இரவு 8.15 மணிக்கு அவர் உயிர் பிரிந்தது. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகில் உள்ள அமரடக்கி கிராமத்தில் மாணிக்க உடையார்பிச்சையம்மாள் ஆகியோரின் மகனாக 12.9.1946 அன்று பிறந்த இவரது வயது 78 ஆகும். இவர், திருச்சி புது க் கோட்டை சாலையில் உள்ள பாவேந்தர் பாரதிதாசன் கல்விக் குழுமத்தின் ஆலோசகர்.

ஏ.எம்.இராமன் அவர்களின் உடல் சென்னை, இந்திரா நகர் முதல் பிரதான சாலையில் உள்ள அவரது இல்லத்தில், செவ்வாய்க் கிழமை காலை முதல் நண்பகல் 1 மணி வரை பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது. ஏராளமான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளும் ஏ.எம்.இராமன் அவர்களின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அதன் பின்னர் அவரது உடல் ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகில் இருக்கும் அவரது சொந்த ஊரான அமரடக்கி கிராமத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவரது உடல் இன்று (புதன் கிழமை - 4.12.2024) பகல் 12 மணி அளவில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

மறைந்த ஏ.எம்.இராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள், முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களின் அன்புக்குரிய நண்பராக விளங்கிய தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் நடராசன் அவர்களின் மருமகன். சேலம் கிழக்கு தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கள்ளக்குறிச்சி தொழில் அதிபர் ஏ.மணி ஆகியோரின் சம்பந்தி ஆவார்.

இவருக்கு திருமதி பானுராமன் என்ற மனைவியும், டாக்டர் எம்.ஆர்.பாரி, டாக்டர் எம்.ஆர். அருண் என இரண்டு மகன்களும், இரண்டு பேரன்களும், இரண்டு பேத்திகளும் உள்ளனர்.

நாடாளுமன்ற வளாகத்தில்

# 'இந்தியா' கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்!

## அதானி ஊழல் குறித்து விரிவான விசாரணை நடத்த வலியுறுத்தல்!

புதுடெல்லி, நவ.4-

அதானி ஊழல் குறித்து விசாரணை நடத்த வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

வெளிநாடுகளில் ஒப்பந்தங்களை பெற அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்த விவகாரத்தில் கவுதம் அதானிக்கு அமெரிக்க நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளது.

உலகளவில் இந்தியாவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய அதானி மீது உரிய விசாரணை நடத்தி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒன்றிய அரசுக்கு, 'இந்தியா' கூட்டணி கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. நாடாளுமன்றத்திலும் இது குறித்து குரல் எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால், ஒன்றிய அரசு, இதற்கு செவி சாய்ப்பதாக தெரியவில்லை.

இந்நிலையில், அதானி மீது நடவடிக்கை மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில், இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களவை எதிர்க் கட்சி தலைவர் ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி எம்.பி., மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி, ஆ.ராசா, மாநிலங்களவைக் குழுத் தலைவர், திருச்சி சிவா உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத் தில் கலந்து கொண்டனர். அதானி முறைகேடு குறித்து விசாரிக்க வேண்டும், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கைகளில் பதாகைகளை ஏந்தியபடி தமிழில் முழக்கங்களை எழுப்பினர்.

தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் தி.மு.கழக எம்.பி.க்களின் குரல்!

## சரமாரி கேள்வி!

புதுடெல்லி, டிச.3–

**நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக நேற்று (3.12.2024) எழுப்பிய சரமாரி கேள்விகள் வருமாறு:–**

**பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்–அப்களின் விவரங்களை ஒன்றிய அரசு வெளியிட வேண்டும்.**

**கனிமொழி கருணாநிதி**

இந்தியாவில் மொத்தம் உள்ள பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப் நிறுவன ங்களின் எண்ணிக்கையை ஒன்றிய அரசு வெளியிட வேண்டும் என மக்களவையில் திமுக எம்.பி. கனிமொழி கருணாநிதி கேட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது :

தமிழ்நாட்டில் பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் எந்தெந்த தொழில் துறைகளில் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகம் ஊக்குவிப்புத் துறையின்கீழ் (DPIIT) பதிவு செய்யப்பட்டுள்ளது எனும் தகவல் வெளியிட வேண்டும்.

இந்நிறுவனங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை SC, ST மற்றும் OBC பிரிவுகளின் அடிப்படையில் வழங்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு இதுவரை தமிழ்நாட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் விவரங்களை வெளியிட வேண்டும்.

ஸ்டார்ட்–அப் நிறுவனங்களின் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் நிரந்தரமான வளர்ச்சியை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள், நிதி, தொழில் நுட்பம் மற்றும் சந்தை வாய்ப்புகளை அணுகுவதில் பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்–அப் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களை அரசு ஆய்வுசெய்யவும் அவற்றை எதிர்கொள்ள எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்த விவரங்களையும் வெளியிட வேண்டும்.

**டீ மற்றும் காபி பொருட்களுக்கு MSP நீட்டிப்பு**

**ஆ.ராசா**

தேயிலை மற்றும் காபி போன்ற பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) நீட்டிப்பதற்கான கோரிக்கைகள் பெறப்பட்டிக்கின்றதா என திமுக எம்.பி. ஆ. ராசா கேட்டுள்ளார். மேலும் இடைத்தரகர்களினால் தேயிலை மற்றும் காபி தொழில் முனைவோர்கள் பாதிக்கப்படாமல் இருக்க தேநீர், காபி போன்றவற்றின் MSP அதில் அச்சிடப்படுமா எனும் விவரங்களையும் வெளியிட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

**நூறு நாள் வேலைத்திட்டத்தை நூற்றைம்பது நாட்கள் ஆக்குக!**

**கதிர் ஆனந்த்**

ஆறு சதவிகித ஊதிய உயர்வோடு 100 நாட்கள் வேலைத்திட்டத்தை 150 நாட்களாக அதிகரிக்க வேண்டும் என திமுக எம்.பி. கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கோரிக்கை வைத்துள்ளார்.

கிராமப்புற மக்கள் குறிப்பாக பெண்கள் பயன்பெறும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஸ்வச்–பாரத், பிரதமரின் அனைவருக்கும் வீடு மற்றும் பல கிராமப்புற மக்கள் மேம்பாட்டு திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பது குறித்து கேள்வி எழுப்பியுள்ள அவர், SC/ST/ OBC மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கான வேலைவாய்ப்பை உறுதிசெய்யும்தி ட்டங்களை ஒன்றிய அரசு உருவாக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

**உள்நாட்டு எஃகு உற்பத்தித் தொழிலை மேம்படுத்த கோரிக்கை!**

**செல்வகணபதி**

உலகின் கச்சா எஃகு உற்பத்தியில் இந்தியா இரண்டாவது வகிக்கிறது எனும் தகவலின் உண்மை நிலவரம் குறித்து திமுக எம்.பி. செல்வகணபதி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். அதேபோல் கடந்த மார்ச் வரையிலான நிதியாண்டில் உலோகக் கலவையின் நிகர இறக்குமதியாளராகவும் இந்தியா இருந்துள்ளதா என கேட்டிருக்கிறார்.

கடந்த ஏழு ஆண்டுகளில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயத்த எஃகு இவ்வாண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான மாதங்களில் உச்சத்தை எட்டியிருக்கிறது மற்றும் கடந்த ஆறு ஆண்டுகளில் மொத்தம் இறக்குமதி செய்யப்பட்ட ஆயத்த எஃக்கின் உச்சமாக நடப்பாண்டில் 3.7 மில்லியன் மெட்ரிக் டன்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது எனும் செய்திகளின் உண்மைத்தன்மையையும் விளக்கக் கோரியுள்ளார்.

உள்நாட்டு எஃகுத் தொழிலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய எஃகு சங்கம் ஒன்றிய அரசிடம் கோரியுள்ளதா, ஆம் என்றால் அதன் அடிப்படையில் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விவரங்களையும் வெளியிடக் கேட்டுள்ளார்.

**PM– KISHAN திட்டத்தின்கீழ் போதிய நிதி உதவி இல்லை!**

**டாக்டர். கலாநிதி வீராசாமி**

பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி (PM-KISAN) திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதி உதவி போதுமானதாக இல்லை என தொடர்ந்து விவசாயிகள் கோரிவருவது குறித்து அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய அரசு அறிக்கை வெளியிட வேண்டும் என திமுக எம்.பி. டாக்டர் கலாநிதி வீராசாமி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

விவசாய கச்சாப் பொருட்களின் விலை உயர்வு கணக்கில் கொண்டும் மற்றும் விவசாய குடும்பங்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் அரசின் நிதி பங்களிப்பு இருக்க வேண்டும் என்றும் அதற்குரிய ஆய்வுகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தன் அறிக்கையில் கேட்டுள்ளார்.

மேலும் விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பில் தற்போதைய நிதி உதவியின் தாக்கத்தை அறிந்துகொள்ளும் வகையில் அரசாங்கம் விவசாயிகளுடன் ஏதேனும் ஆய்வுகள் அல்லது ஆலோசனைகளை நடத்தியிருந்தால் அதுகுறித்த தகவல்களை வெளியிட வேண்டும் மற்றும் தொடர்ந்து விவசாயிகள் சந்திக்கும் இடையூறுகள் குறித்த விரிவான மதிப்பாய்வு செய்துமுடிக்க அரசு நிர்ணயித்திருக்கும் காலக்கெடுவை அறிவிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

**தஞ்சாவூரில் PM– KISHAN திட்டத்தின் நிலை என்ன?**

**முரசொலி**

கடந்த 2019ஆம் ஆண்டு முதல் பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி (PM-KISAN) திட்டத்தின்கீழ் தஞ்சாவூரில் பயனடைந்தவர்களின் பட்டியல், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதித்தொகையின் விவரம் மற்றும் தற்போது ஒன்றிய அரசுக்கு நிதியை உயர்த்தும் திட்டம் ஏதேனும் இருந்தால் அது குறித்த விவரங்களை வெளியிடுமாறு திமுக எம்.பி. முரசொலி நாடாளுமன்றத்தில் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரை கேட்டுள்ளார்.

**தமிழ்நாட்டில் கூட்டுறவுகளை வலுப்படுத்த கோரிக்கை!**

**தமிழச்சி தங்கபாண்டியன்**

தமிழ்நாட்டில் கூட்டுறவுகளை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் பற்றிய விவரங்களை வெளியிட வேண்டும் என திமுக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேட்டுள்ளார்.

# தேசிய கல்விக் கொள்கை - 2020 மறு ஆய்வு செய்யப்படுமா?

## மக்களவையில் ஆ.இராசா எம்.பி. கேள்வி!

புது தில்லி, டிச. 4 -

'என்.இ.பி. 2020' திட்டம் மறு ஆய்வு செய்யப்படுமா? என்று ஆ.ராசா எம்.பி. மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

தேசிய கல்விக் கொள்கை (என்.இ.பி.) 2020 மறுஆய்வு செய்யப்படுமா? என்று மக்களவையில் நீலகிரி தொகுதி தி.மு.க. உறுப்பினர் ஆ.இராசா எழுப்பிய கேள்விக்கு, அத்திட்டமும் ஆலோசனைகளும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன என்று ஒன்றிய கல்வித் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆ.இராசா எம்.பி. 'தேசிய கல்விக்கொள்கை, சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் தொடர்புடைய விதிகள் உள்பட இலவச மற்றும் கட்டா யக் கல்வி உரிமைச் சட்டம் தொடர்பாக பல மாநில அரசுகள் தெரிவித்துள்ள ஆட்சே பம் அடிப்படையில் அவற்றை ஒன்றிய அரசு மறு ஆய்வு செய்ய உத்தேசித்துள்ளதா?' என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஜெயந்த் சௌத்ரி திங்கள் கிழமை அளித்துள்ள எழுத்துப்பூர்வ பதில் வருமாறு:



2020, ஜூலை 29இல் தேசிய கல் விக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு கிராம பஞ்சாயத்துகள் உள்பட சம் பந்தப்பட்ட அனைவரிடமும் ஒன்றிய அரசு விரிவாக விவாதித்தது.

இத்திட்ட அமலாக்கத்தை மறுஆய்வு மற்றும் புத்தாக்க யோசனைகள் குறித்து பயிற்சிப் பட்டறைகள், ஆலோசனை மற்றும் மறு ஆய்வுக் கூட்டங்கள் போன்றவை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்டவற்றுடன் அவ்வப்போது நடத்தப் பட்டுள்ளன.

2020, ஜூனில் தேசிய கல்வி அமைச் சர்கள் மாநாடு, மாநிலத் தலைமைச் செயலர்கள் மாநாடு, அதே ஆண்டு ஆகஸ்டில் மத்தியக் குழுவின் 7ஆவது ஆட்சிமன்றக்குழு கூட்டம் ஆகியவற்றில் விவாதிக்கப்பட்டது. இந்த திட்டத்தைச் சுற்றியுள்ள நேர்மறை அம்சங்கள் குறித்து விரிவாக விளம்பரப் படுத்தப்பட்டது. தொடர்ச்சியாக நடந்த ஆலோசனை மற்றும் மறு ஆய்வுக்கூட்டங்களில் யோசனைகள், மாநில அளவிலான முன்முயற்சிகள், திட்ட அமலாக்க உத் திகள் குறித்து விரிவாக யோசனைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இவை அனைத்தும் முறையான என்.இ.பி. அமலாக்கத்துக்கு வித்திட்டன. இந்த ஆலோசனைகள் தொடர்ச்சியான நடைமுறை என்று அமைச்சர் கூறியுள்ளார்.

புயலால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு

# ரூ.2 ஆயிரம் கோடியை உடனே வழங்கவேண்டும்!

## நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.4-

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட தமிழ் நாட்டிற்கு உடனடியாக ரூ.2 ஆயிரம் கோடியை வழங்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

**மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு பேசியதாவது:**

இயற்கை பேரிடரால் தமிழ்நாட்டில் 15 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன குறிப்பாக விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணமாலை, செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் கடும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன

இம்மாவட்டங்களை சேர்ந்த ஒன்றரை கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 12 பேர் தங்களது உயிரை இழந்துள்ளனர் 721 வீடுகள் சேதமடைந்துள்ளன. 5,936 பள்ளிக் கூட கட்டடங்கள், 4,269 அங்கன்வாடிகள், 1,650 பஞ்சாயத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன தமிழ்நாட்டின் பாதிப்பை கருத்தில் கொண்டு ஒன்றிய குழுவை மாநிலத்துக்கு உடனே அனுப்ப வேண்டும். உரிய நிவாரண நிதியை வழங்க வேண்டும்.

புயல், மழை, வெள்ள பாதிப்பு குறித்து பேச அனுமதியளிக்கப்பட்டது. அப்போது பேசிய மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர். பாலு, புயல், மழை, வெள்ளத்தால் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ள தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு உடனே 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஒன்றிய குழுவை தமிழ்நாட்டுக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

**தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா பேசியதாவது:-**

ஃபெஞ்சல் புயலால் சென்னை, விழுப்புரம், கடலூர், செங்கல்பட்டு, திருவண்ணாமலை...

திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன இம்மாவட்டங்களில் அடிப்படை கட்டமைப்புகள் முற்றி லும் பாதிக்கப்பட்டுள்ளன பயிர்கள் சேதமடைந்துள்ளன. உயிரிழப்புகள் உள்ளிட்டவை ஏற்பட்டுள்ளன வீடுகள், சாலைகள், ரயில்வே தண்டவாளங்கள், மேம்பாலங்கள்...

மின்கம்பங்கள், விவசாய நிலங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன புயல் மற்றும் மழை வெள்ள பாதிப்பால் தமிழ்நாட்டில் கணக்கில் அடங்கா குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவே, ரூ.2 ஆயிரம் கோடி நிதியை உடனே விடுவித்து புயல், மழை, வெள்ள பாதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில்... மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள ஒன்றிய அரசு உதவிட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஜெயபாலன் இல்லத் திருமண விழா!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்து! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, பங்கேற்பு

திருவள்ளூர் டிச 04;

திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன் திருவள்ளூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஜெ.ஜெயசீலி ஜெய பாலன் இல்லத் திருமண விழா நாளை 5-12-2024 மாலை 6.30 மணி அளவில் திருவேற்காடு ஜி.பி.என். பேலஸில் நடைபெறுகிறது இதில் மணமக்கள் ஜெ.குணபாலன், பி.ஷர்வின்பூஜா ஆகியோரை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்துகொண்டு தலைமை தாங்கி மணமக்களை வாழ்த்துகிறார்



திருமண நிகழ்ச்சியில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, கே. ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் பிரபுகஜேந்திரன், சி. ஜெரால்டு, மா.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்து தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மேயர் ஜி.உதயகுமார், மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சண்.பிரகாஷ், சே.பிரேம்ஆனந்த், ஆர். ஜெயசீலன், புஜ்ஜி.டி.ராமகிருஷ்ணன், என். இ.கே.மூர்த்தி, பேபிசேகர், பொன் விஜயன், ஜி.நாராயணபிரசாத் டி. தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தி.வை.ரவி தங்கம்முரளி, தி.வே. முனுசாமி, மற்றும் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நகர் மன்ற தலைவர்கள் துணைத் தலைவர்கள் ஒன்றிய குழு தலைவர்கள் துணைத் தலைவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக நூற்றாண்டு நினைவு கட்டிடத்தில், அனைத்து பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் தங்களது துறையில் சிறப்பாகவும், ஒருங்கிணைந்த பயிற்சி மேற்கொள்வதற்கும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு சுகாதார நலனுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.கே.நாராயணசாமி, பதிவாளர் மரு.பி.ஆறுமுகம், கோயம்புத்தூர் ஸ்ரீ இராமகிருஷ்ணா பல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.எல்.தீபநந்தன் மற்றும் மருத்துவப்பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம், சிறுகடம்பூர் சாவடி தெருவில் நேற்று (03.12.2024) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்ததீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பெஞ்சல் புயல் காரணமாக பெய்து வரும் கனமழை மற்றும் தீவிர புயல் பாதிப்பு காரணமாக சேதமடைந்த மின் கட்டமைப்பு சீரமைப்பு பணிகளை ஆய்வு செய்து, மின் சீரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுடன் கலந்துரையாடி வெகுவாக பாராட்டினார். உடன் செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க. நந்தகுமார், இயக்குநர் (பகிர்மானம்) அ. ரா. மாஸ்கர்னஸ், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.